# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## அரசியலமைப்புக்கான பதினெட்டாவது திருத்தம்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால் 2010, செத்தெம்பர் மாதம் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

[ *39* **ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 16.00** **தபாற் செலவு : ரூபா 7.50**

ச.வ.ஓ. 19/2010

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

> சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், அரசியலமைப்புக்கான பதினெட்டாவது திருத்தம் என எடுத்துக்காட்டப்படலாம்.

> இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பினது 31 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் "அரசியலமைப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு, அதன் 31 ஆம் உறுப்புரையில் இத்தாற் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :-

(1) அவ்வுறுப்புரையின் (2) ஆம் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுறுப்புரையின் (3அ)(அ)(i) என்னும் பந்தியில்-

(அ) "அவரது முதலாவது பதவிக்காலம் தொடங்கியதி லிருந்து நான்காண்டுகள் முடிவடைந்த பின்னர் எந்நேரத்திலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அவரது நடப்புப் பதவிக்காலம் தொடங்கியதிலிருந்து நான்காண்டுகள் முடிவ டைந்தபின்னர் எந்நேரத்திலும்" என்னும் சொற் களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) "பிரகடனம் மூலம் வெளிப்படுத்தலாம்," என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"பிரகடனம் மூலம் வெளிப்படுத்தலாம் :

ஆயின், இவ்வுறுப்புரையின் நியதிகளின்படி சனாதிபதி மேலுமொரு பதவிக்காலப்பகுதிக்குத் தேர்ந் தெடுக்கப்படுமிடத்து, அவர் அடுத்துப் பின்னரான எந்தப் பதவிக் காலப்பகுதிக்கு அவ்வாறு தேர்ந்தெடுக்

கப்படக்கூடுமோ அந்த ஏதேனும் பதவிக்காலம் தொடர்பில் இவ்வுறுப்புரையின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.”.

*அரசியலமைப்பின் 32 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**3**. அரசியலமைப்பின் 32 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (3) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

“(3) சனாதிபதி, அவரது பதவியின் நிமித்தம் மூன்று மாதங்களுக்கொருதடவை பாராளுமன்றத்துக்கு வருகை தருதல் வேண்டும். இப்பணியை நிறைவேற்றுவதில், சனாதிபதி, வாக்களிப்பதற்கான உரித்துடைமையைத் தவிர, பாராளுமன்ற உறுப்பினரொருவருக்குள்ள எல்லாச் சிறப்புரிமைகளுக்கும், விடுபாட்டுரிமைகளுக்கும், தத்துவங்களுக்கும் உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தின் அல்லது அதன் உறுப்பினர்களின் ஏதேனும் சிறப்புரிமைகளினது மீறுகைக்கு ஆளாதலுமாகாது.”; அத்துடன்

(2) அதன் (3) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

“(4) சனாதிபதி, அவரது பதவியின் நிமித்தம், பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கும் அதற்குச் சமாச்சாரம் அனுப்புவதற்கும் உரிமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.”.

*அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயத்தை நீக்கிவிடுதல்.*

**4**. அரசியலமைப்பின் VIIஅ என்னும் அத்தியாயம் (உறுப்புரைகள் 41அ முதல் 41ஏ வரை) இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பில் புதிய 41அ என்னும் உறுப்புரையை உட்புகுத்துதல்.*

**5**. அரசியலமைப்பின் 41 ஆம் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் புதிய தலைப்பும் உறுப்புரையும் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அதன் தலைப்பாகவும் 41அ என்னும் உறுப்புரையாகவும் பயனுறுதலும் வேண்டும்:-

**"ஆட்சித்துறை**
**பாராளுமன்றப் பேரவை**

*அட்டவணைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக் குழுக்களும் பதவிகளும் தொடர்பில் சனாதிபதி நியமனங்களைச் செய்தல்.*

*41அ.* (1) இவ்வுறுப்புரைக்கான அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளரும் உறுப்பினர்களும், இவ்வுறுப்புரைக்கான அட்டவணை II இன் I ஆம் பாகத்திலும் IIஆம் பாகத்திலும் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களும், சொல்லப்பட்ட அட்டவணைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுக்களுக்கும் பதவிகளுக்கும் சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய நியமனங்களைச் செய்வதில், சனாதிபதி -

(1) பிரதம அமைச்சர் ;

(2) சபாநாயகர் ;

(3) எதிர்க்கட்சித் தலைவர் ;

(4) பிரதம அமைச்சரின், பாராளுமன்ற உறுப்பினரொருவராகவிருக்க வேண்டிய ஒரு நியமத்தர் ; அத்துடன்

(5) எதிர்க்கட்சித் தலைவரின், பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவராகவிருக்க வேண்டிய ஒரு நியமத்தர் ஆகியோரைக் கொண்டமைந்த ஒரு பாராளுமன்றப் பேரவையின் அவதானிப்புகளைக் கோருதல் வேண்டும்:

ஆயின், மேலுள்ள (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பந்திகளின் நியதிகளின்படி நியமிக்கப்படும் ஆட்கள், மேலுள்ள (1) ஆம், (2) ஆம் மற்றும் (3)ஆம் பந்திகளில் விதித்துரைக்கப்பட்ட ஆட்கள் சேர்ந்துள்ள இனமல்லாத இனத்தைச் சேர்ந்துள்ள நியமத்தர்களாகவிருப்பதை உறுதிசெய்யும் அத்தகைய வகையில் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை I

1. தேர்தல் ஆணைக்குழு.
2. பகிரங்க சேவை ஆணைக்குழு.
3. தேசிய பொலிசு ஆணைக்குழு.
4. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.
5. இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துகைகளைப் புலனாய்வு செய்வதற்கான நிரந்தர ஆணைக்குழு
6. நிதி ஆணைக்குழு.
7. எல்லை வரையறை ஆணைக்குழு.

அட்டவணை II

பாகம் I

1. பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளும்.
2. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் நீதிபதிகளும்.
3. தவிசாளர் தவிர்ந்த, நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்.

பாகம் II

1. சட்டத்துறைத் தலைமையதிபதி.
2. கணக்காய்வாளர் தலைமையதிபதி.
3. நிருவாகத்துக்கான பாராளுமன்ற, ஆணையாளர் (ஒம்புட்சுமான்).
4. பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

(2) அரசியலமைப்பின் 64 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபாநாயகர், இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக, மேற்கூறப்பட்ட உறுப்புரையின் (1) ஆம் பந்தியின்கீழ் பாராளுமன்ற உறுப்பினரொருவர் சபாநாயகராக விருப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் வரை, பாராளுமன்றம் கலைக்கப்படுவதன்மேல் சபாநாயகராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும். புதிய சபாநாயகர் அதன்மேல் மேற்சொல்லப்பட்ட பாராளுமன்றப் பேரவையின் உறுப்பினராதல் வேண்டும்.

(3) பாராளுமன்றத்தின் கலைப்பு எவ்வாறிருப்பினும், எதிர்க்கட்சித் தலைவர், இவ்வுறுப்புரையின் நோக்கங்களுக்காக, அத்தகைய கலைப்பை அடுத்து வருகின்ற ஒரு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பாராளுமன்ற உறுப்பினரொருவர் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படும் அத்தகைய காலம்வரை, எதிர்க்கட்சித் தலைவராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும். புதிய எதிர்க்கட்சித் தலைவர் அதன்மேல் மேலே சொல்லப்பட்ட பாராளுமன்றப் பேரவையின் உறுப்பினராதல் வேண்டும்.

(4) பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவுள்ள முறையே பிரதம அமைச்சரின் நியமத்தரும் எதிர்க்கட்சித்தலைவரின் நியமத்தரும், அத்தகைய கலைப்பையடுத்து நடைபெறும் ஒரு பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படும்வரை, உறுப்பினர்களாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும். பிரதம அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும், அதன்மேல், முறையே இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்தியின் (4) ஆம் மற்றும் (5)ஆம் உட்பந்திகளின் நியதிகளின்படி தமது நியமத்தர்களாகவிருப்பதற்கு இரு புதிய பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(5) இவ்வுறுப்புரையின்கீழ் அமைக்கப்பட்ட பேரவையின் பதவிக்காலம், 62 ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்கு நீடித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதவிக்காலம், 70 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி பாராளுமன்றத்தின் ஏதேனும் ஒத்திவைப்பினால் பாதிக்கப்படுதலுமாகாது :

ஆயின், முறையே பிரதம அமைச்சரினதும் எதிர்க்கட்சித் தலைவரினதும் நியமத்தர்களாக நியமிக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய பதவிக்காலத்தின்போது, சனாதிபதியினால் அகற்றப்படலாம் அல்லது அத்தகைய நியமத்தர் இயலாமைக்குட்படும் பட்சத்தில், அத்தகைய பேரவையில் தமது நியமித்தராகவிருப்பதற்கு வேறொரு பாராளுமன்ற உறுப்பினரைப் பெயர்குறித்து நியமிக்கும்படி விடயத்துக்கேற்ப, பிரதம அமைச்சரை அல்லது எதிர்க்கட்சித் தலைவரைச் சனாதிபதி தேவைப்படுத்தலாம். அத்தகைய பட்சத்தில், விடயத்துக்கேற்ப, ஒன்றில் அகற்றுகையினால் அல்லது இயலாமையினால் உருவாக்கப்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர், அவர் எந்த உறுப்பினரின் வெற்றிடத்துக்காகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்டாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே அத்தகைய பேரவையின் உறுப்பினராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(6) இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்திக்கான அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுக்களின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் நியமனங்களைச் செய்யும் நோக்கத்துக்காக (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பாராளுமன்றப் பேரவையின் அவதானிப்புகளைச் சனாதிபதி கோரும்போது, அத்தகைய கலந்தாலோசனைத் தேதியிலிருந்து ஒரு வாரத்தினுள், அவர், அத்தகைய நியமனங்களுக்காக அவரினால் முன்மொழியப்பட்ட ஆட்கள் பற்றிய அவதானிப்புகளைச் சபாநாயகரின்மூலம் தனக்கு அறிவிக்கும்படி பேரவையைத் தேவைப்படுத்துதல் வேண்டும். அத்தகைய பேரவை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அதன் அவதானிப்புகளை அவருக்கு அறிவிக்கத் தவறினால் சனாதிபதி, மேற்கூறப்பட்ட நியமனங்களைச் செய்வதற்கு முற்படுதல் வேண்டும்.

(7) பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் தலைவர், இவ்வுறுப்புரையின் (1) ஆம் பந்திக்கான அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுவொன்றின் தவிசாளராக அல்லது உறுப்பினராக நியமிக்கப்படுவதற்காக எவரேனுமாளின் பெயரை முன்மொழிய விரும்புமிடத்து, அவர், மேலே குறித்துரைக்கப்பட்ட ஒரு வார காலப்பகுதியினுள், மேற்கூறப்பட்ட பதவிகள் தொடர்பாக எவரேனுமாளின் பெயரைச் சபாநாயகருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். சனாதிபதி, அத்தகைய நியமனங்களைச் செய்யும்போது, அத்தகைய பெயர்களைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(8) இவ்வுறுப்புரையின் அட்டவணை I இல் குறிப்பீடு செய்யப்பட்டவரும், ஓர் ஆணைக்குழுவின் தவிசாளராக அல்லது உறுப்பினராக இருப்பதற்கு நியமிக்கப்பட்டவருமான ஆளெவரும் அல்லது இவ்வுறுப்புரைக்கான அட்டவணை IIஇன் I ஆம் பாகத்திலும் II ஆம் பாகத்திலும் குறிப்பீடுசெய்யப்பட்ட பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஆட்களுள் எவரும், அரசியலமைப்பில் அல்லது அத்தகைய நோக்கத்துக்காக இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, அகற்றப்படுதலாகாது. அத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்படாதவிடத்து, அத்தகைய ஆள் சனாதிபதியினால் அகற்றப்படுதல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**6**. அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(1) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டியதும், (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) பகிரங்க சேவை ஆணைக்குழுவொன்று

இருத்தல் வேண்டும் ; இவர்களுள் மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாதோர், பகிரங்க அலுவலர்களாகப் பதினைந்தாண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள ஆட்களாகவிருத்தல் வேண்டும். சனாதிபதி, அதன் தவிசாளராக உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.";

(2) அதன் (4) ஆம் பந்தியில் "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அதன் (7) ஆம் பந்தியில் "அத்தகைய காலப்பகுதியின் போது, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்குத்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய காலப்பகுதியின்போது, ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்குத்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*அரசியலமைப்பின் 55 ஆம் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

**7.** அரசியலமைப்பின் 55 ஆம் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது :-

*"அமைச்சரவையினதும் ஆணைக் குழுவினதும் தத்துவங்களும் பணிகளும்.*

55. (1) அமைச்சரவையானது, பகிரங்க அலுவலர்கள் தொடர்பான எல்லாக் கொள்கை விடயங்களுக்கும், நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் என்பன தொடர்பான கொள்கையுட்பட, ஏற்பாடு செய்தலும் அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(2) எல்லாத் திணைக்களத் தலைவர்களினதும் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் என்பன அமைச்சரவைக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய, பகிரங்க அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் என்பன பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்குரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, சட்டத்தினால் தாபிக்கப்படுகின்றவாறான மாகாண பகிரங்க சேவையின் தத்துவங்களையும் பணிகளையும் திறக்குறைவு செய்தலாகாது.

(5) ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காகவும் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாகவும் வகைசொல்லவேண்டியதாகவும் இருத்தல் வேண்டும். ஆணைக்குழுவானது, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும், அத்தகைய ஆண்டு தொடர்பிலான அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 56 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**8**. அரசியலமைப்பின் 56 ஆம் உறுப்புரை, அதன் (1) ஆம் பந்தியில் "ஆணைக்குழுவினாற் குறித்துரைக்கப்படுகின்றவாறான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சரவையினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 57 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**9**. அரசியலமைப்பின் 57 ஆம் உறுப்புரை. அதன் (1) ஆம் பந்தியில் "ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சரவையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 61ஊ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**10.** அரசியலமைப்பின் 61ஊ என்னும் உறுப்புரை, "பகிரங்க அலுவலர்" என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத் திலிருந்து "தேசிய பொலிசு ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் பொலிசு அலுவலரொருவரை" என்னும் சொற்களை விட்டுவிடு வதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 65 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**11.** அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் பந்தியில் "அவர், 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, சனாதிபதியி னால் நியமிக்கப்படுதல் வேண்டும் ;" என்னும் சொற்க ளுக்கும் எண்ணுக்கும் பதிலாக "அவர், சனாதிபதி யினால் நியமிக்கப்படுதல் வேண்டும்;" என்னும் சொற் களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அதன் (6) ஆம் பந்தியில் "ஆளொருவரை 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, சனாதிபதி நியமிக்கலாம்." என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "ஆளொருவரைச் சனாதிபதி நியமிக்கலாம்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*அரசியலமைப் பின் 91 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**12.** அரசியலமைப்பின் 91 ஆம் உறுப்புரை, அதன் (1) ஆம் பந்தியில் உட்பந்தி (ஈ) (Vஆ) என்பதனை நீக்கிவிடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 103 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**13.** அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரை, அதன் (1) ஆம் பந்தியில் "ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத் தல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படு கின்றது.

*அரசியலமைப் பின் 104ஆ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**14.** அரசியலமைப்பின் 104ஆ என்னும் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (4) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(4அ) ஐயத்தைத் தவிர்ப்பதற்காக விடயத்துக்கேற்ப, தேர்தலொன்றை நடாத்துவதற்கான கட்டளையொன்றை ஆக்குவதோடு அல்லது மக்கள் தீர்ப்பொன்றை நடாத்தும்படி தேவைப்படுத்துகின்ற பிரகடனமொன்றைச் செய்வதோடு தொடங்குகின்ற காலப்பகுதியின்போது ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஏதேனும் வழிகாட்டு நெறியானது -

(அ) விடயத்துக்கேற்ப, முறையே தேர்தல் நடாத்துவதுடன் அல்லது முறையே மக்கள் தீர்ப்பை நடாத்துவதுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட கருமங்களுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அரசியலமைப்பின்கீழ் நியமிக்கப்பட்ட பகிரங்க சேவை தொடர்பான ஏதேனும் கருமத்துடன் அல்லது விடயத்துக்கேற்ப, பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அல்லது நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் நிருவாக நோக்கெல்லைக்குள் உள்ள ஏதேனும் கருமத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருத்தலாகாது."; அத்துடன்

(2) அதன் (5) ஆம் பந்தியில், அதன் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் உட்பந்திகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

"(ஆ) விடயத்துக்கேற்ப, எவரேனும் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்புத் தொழிற்படுத்துநர் அல்லது செய்தித்தாளொன்றின் உரிமையாளர் அல்லது வெளியீட்டாளர், பந்தி (அ) இன்கீழ் அவர்களுக்கு வழங்கப்பட்ட எவையேனும் வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் அவர்களின் கடமையாதல் வேண்டும்.

*அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**15.** அரசியலமைப்பின் 107 ஆம் உறுப்புரை, அதன் (1) ஆம் பந்தியில் "41இ ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, குடியரசின் சனாதிபதியினால் அவரது கைப்பட எழுதப்பட்ட எழுத்தாணையின்மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும்." என்னும்

சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக “சனாதிபதியினால் அவரது கைப்பட எழுதப்பட்ட ஆணைப்பத்திரத்தின்மூலம் நியமிக்கப்படுதல் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 109 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**16**. அரசியலமைப்பின் 109 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் பந்தியில் “சனாதிபதி, 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய நியமித்தல் வேண்டும்.” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக “சனாதிபதி நியமித்தல் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அதன் (2) ஆம் பந்தியில் “41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய வேறோர் ஆளைச் சனாதிபதி நியமிக்கலாம்.” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக “வேறோர் ஆளைச் சனாதிபதி நியமிக்கலாம்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பின் 111ஈ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**17**. அரசியலமைப்பின் 111ஈ என்னும் உறுப்புரை, அதன் (1)ஆம் பந்தியில் “அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியால் நியமிக்கப்படும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “சனாதிபதியினால் நியமிக்கப்படும்” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 111உ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**18**. அரசியலமைப்பின் 111உ என்னும் உறுப்புரை, அதன் (5)ஆம், (6) ஆம் பந்திகளில் “அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது” என்னும் சொற்களை அவற்றிலிருந்து விட்டு விடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**19**. அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் பந்தியில், “41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக “சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அதன் (4) ஆம் பந்தியில், "சனாதிபதி, 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, ஆளொருவரை நியமிக்கலாம்." என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "சனாதிபதி ஆளொருவரை நியமிக்கலாம்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*அரசியலமைப் பின் 154 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**20**. அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை, அதன் (1) ஆம் பந்தியில் "பகிரங்க சேவை ஆணைக்குழுவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பகிரங்க சேவை ஆணைக்குழுவின், மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுக்களின்," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 154ண என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**21**. அரசியலமைப்பின் 154ண என்னும் உறுப்புரை, அதன் (1)ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியில் "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஏனைய மூன்று உறுப்பினர்கள்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஏனைய மூன்று உறுப்பினர்கள்." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*அரசியலமைப் பின் 155அ என்னும் உறுப்புரையைத் திருத்துதல்.*

**22**. அரசியலமைப்பின் 155அ என்னும் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(1) (இவ்வத்தியாயத்தில் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தேசிய பொலிசு ஆணைக்குழுவொன்றிருத்தல் வேண்டும் ; அது, சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். சனாதிபதி, உறுப்பினரொருவரைத் தவிசாளராக நியமித்தல் வேண்டும்."; அத்துடன்

(2) அதன் (4) ஆம் பந்தியில் "அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*அரசியலமைப்பில் புதிய 155ஊஊ மற்றும் 155ஊஊஊ என்னும் உறுப்புரைகளை உட்புகுத்துதல்.*

**23.** அரசியலமைப்பின் 155ஊ என்னும் உறுப்புரையை உடனடுத்துப் பின்வரும் புதிய உறுப்புரைகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அதன் 155ஊஊ மற்றும் 155ஊஊஊ என்னும் உறுப்புரைகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"ஆணைக் குழுவின் தத்துவங்கள்.

155ஊஊ. ஆணைக்குழுவானது, ஒரு பொலிசு அலுவலருக்கெதிராக அல்லது பொலிசுப் படையினருக்கெதிராகப் பொதுமக்களிடமிருந்து அல்லது இன்னலுற்ற எவரேனுமாளிடமிருந்து முறைப்பாடுகளை ஏற்றுக்கவனிப்பதற்கும் புலனாய்வு செய்வதற்குமான நடவடிக்கைமுறைகளைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பரிகாரஞ்செய்தலும் வேண்டும்.

ஆணைக்குழு விதிகளை யாக்குதல்.

155ஊஊஊ. ஆணைக்குழுவானது, காலத்துக்குக்காலம், எக்கருமங்கள் விதிகள் ஆக்கப்படத் தேவைப்படுத்துமோ அக்கருமங்களுக்காக விதிகளை யாக்குதல் வேண்டும். அத்தகைய ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 155எ என்னும் உறுப்புரையை நீக்குதல்.*

**24.** அரசியலமைப்பின் 155எ என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 155ஏ என்னும் உறுப்புரையை நீக்குதல்.*

**25.** அரசியலமைப்பின் 155ஏ என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 155ஒ என்னும் உறுப்புரையை நீக்குதல்.*

**26.** அரசியலமைப்பின் 155ஒ என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 155ஓ என்னும் உறுப்புரையை நீக்குதல்.*

**27.** அரசியலமைப்பின் 155ஓ என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 155ஔ என்னும் உறுப்புரையை நீக்குதல்.*

**28.** அரசியலமைப்பின் 155ஔ என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

*அரசியலமைப்பின் 155க என்னும் உறுப்புரையை மாற்றீடு செய்தல்.*

**29.** அரசியலமைப்பின் 155க என்னும் உறுப்புரை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உறுப்புரை இடப்படுகின்றது :-

*உளதாம் விதிகளையும் ஒழுங்கு விதிகளையும் பேணுதல்.*

> 155க. பொலிசு அலுவலர்கள் தொடர்பாக இவ்வுறுப்புரை தொடங்கும் தேதியன்று வலுவிலுள்ள எல்லா விதிகளும், ஒழுங்குவிதிகளும், நடவடிக்கை முறைகளும், இதன்கீழான விதிகளும் ஒழுங்கு விதிகளும் நடவடிக்கைமுறைகளும் பகிரங்கசேவை ஆணைக்குழுவினால் ஆக்கப்படும்வரை நடைமுறையில் தொடர்ந்திருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்.".

*அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரையைத் திருத்துதல்.*

**30.** அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (1) ஆம் பந்தியில் "41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அதன் (5) ஆம் பந்தியில் "ஓர் ஆளை, 41இ என்னும் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய சனாதிபதி நியமித்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "ஓர் ஆளைச் சனாதிபதி நியமித்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

ஐயங்களைத் தவிர்த்தல்.

**31.** ஐயங்களைத் தவிர்ப்பதற்காக இத்தாற் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது :-

(1) அரசியலமைப்பின் 112 ஆம் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவிலுள்ளவர்களும், இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரான தேதியன்று பதவிவகிப்பவர்களுமான உறுப்பினர்கள், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், தொடர்ந்தும் அத்தகைய உறுப்பினர்களாகப் பதவிவகித்தலும், அரசியலமைப்பின்கீழ் ஆணைக்குழுவுக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும் ;

(2) இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரான தேதியன்று பதவிவகிக்கின்ற பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் ஏனைய நீதிபதிகளும், மேல்நீதிமன்ற நீதிபதிகளும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் தொடர்ந்தும் பதவிவகித்தலும், அரசியலமைப்பின்கீழ் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும் ;

(3) நீதித்துறைச் சேவை ஆணைக்குழுச் செயலாளர், சட்டத்துறைத் தலைமையதிபதி, கணக்காய்வாளர் தலைமையதிபதி, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்சுமான்) மற்றும் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் என்போராக இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரான தேதியன்று பதவிவகிக்கின்றவர்களான ஒவ்வோராளும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் தொடர்ந்தும் பதவிவகித்தலும், அரசியலமைப்பின்கீழ் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டும் ;

(4) இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரான தேதியன்று தேர்தல்கள் ஆணையாளராகப் பதவிவகிக்கின்ற ஆள், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்

பின்னரும் தொடர்ந்தும் பதவிவகித்தலும், 103 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படும்வரை தேர்தல்கள் ஆணையாளராக அரசியலமைப்பின்கீழ் அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் வேண்டுமேன்பதுடன், தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும் தேர்தல்கள் ஆணையாளராகப் பதவிவகிக்காதொழிதலும் வேண்டும் ;

(5) இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரான தேதியன்று அரசியலமைப்பின் அத்தியாயம் XVIIஅ என்பதன்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் முன்னர் முடிவுறாதுள்ளவையும், பொலிசு அலுவலர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் என்பன பற்றியவையுமான எல்லாக் கருமங்களும், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு உரித்தாகுமென்பதுடன், இச்சட்டம் தொடங்குமுன்னரான தேதியன்று தேசிய பொலிசு ஆணைக்குழுவின் முன்னராக முடிவுறாதிருக்கும் பொலிசு அலுவலரினால் செய்யப்பட்ட மேன்முறையீடெதுவும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின்பால் சென்றடைந்துள்ளதாதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க கேட்கப்பட்டு பூர்த்தியாக்கப்படுதலும் வேண்டும்.

(6) மேற்கூறப்பட்ட பேரவையின் பதவிக்காலம் முடிவுற்ற நாளன்றும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்றும் தொடங்குகின்ற காலப்பகுதியின்போது, அரசியலமைப்பின் 41அ என்னும் உறுப்புரையின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவையின் பதவிக்காலம் முடிவுற்றதிலிருந்தும் அதன்பின்னரும், இப்பிரிவின் மேற்போந்த பந்திகளில் விவரிக்கப்பட்ட ஆணைக்குழுக்களும் பதவிகளும் தொடர்பில் செய்யப்பட்ட எல்லா நியமனங்களும், செல்லுபடியானவையாகவும் பயனுள்ளவையாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(7) பகிரங்க சேவை ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினர் பகிரங்கசேவை உறுப்பினர்களாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், ஒரு பகிரங்கப் பதவியின் பதவி வரிசை தொடர்பாக அத்தகைய பதவிக்கு ஏற்புடையற்பாலனவாறான விதிகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

(8) அரசியலமைப்பின் நியதிகளின்படி தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படுவதிலிருந்தும் அதன்பின்னரும், தேர்தல்கள் திணைக்களம், அரசியலமைப்பின் XIVஅ என்னும் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியினராகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒரு தேர்தல் அல்லது மக்கள் தீர்ப்புக் காலப்பகுதியின் போது அது அவ்வாறு தேவைப்படுத்தப்படும்போதெல்லாம், செயலகமொன்றின் பணிகளைப் புரிதலும் வேண்டும்.

**32.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

### அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையின்கீழான புறக்குறிப்பு

அமைச்சரவையின் கருத்தின்படி மேலேயுள்ள சட்டமூலமானது தேசிய நலனுக்கு அவசரமானதென இத்தால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது.

**எஸ். அபேசிங்க**
அமைச்சரவைச் செயலாளர்

2010, ஓகத்து 30 ஆம் திகதி.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்